# முத்தொள்ளாயிரத்தில் ஒப்பனைகள்

*வி. ஷோபிகா*
முதலாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783820

**ஆய்வு சுருக்கம்**

*மன்னர்களின் வாழ்வில் அவர்கள் தங்களை ஒப்பனை செய்து கொண்டார்கள். அவர்கள் மணிமுடி, கழல், கடகம், மாலைகள் போன்றவற்றால் தன்னை அழகாக அலங்காரம் செய்து கொண்டார்கள் என்பது தெரிகின்றது. மன்னர்கள் தன் உடலை அழகுபடுத்திக் கொள்ள ஒப்பனைகளை அணிகலன்களை பயன்படுத்தினார்கள். அவர்கள் அணிந்துள்ள பொருள்கள் அனைத்திலும் ஒவ்வொரு சிறப்பு உண்டு என்பதை நம்மால் உணர முடிகிறது. அந்த வகையில் செவ்வியல் இலக்கியங்களில் ஒன்றான முத்தொள்ளாயிரத்தில் உள்ள மாந்தர்களின் ஒப்பனைகளில் மாலை, பூணூல், வளையல், கடகம், கவசம் போன்ற பல ஒப்பனைகளை இவ்வாய்வு கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *முத்தொள்ளாயிரம், ஒப்பனை, மாலை, வளையல், பூணூல்.*

## முன்னுரை

*முத்துள்ளாயிரம் ஒரு பழமையும் சிறப்பும் பெற்ற ஒரு நூலாக அமைந்துள்ளது. முத்தொள்ளாயிரம் சேர, சோழ, பாண்டிய மன்னர்களை பற்றி கூறப்படும் நூலாக உள்ளது. எழுதியவர் யார் என்று அறியப்படாதவை. இந்நூல் உள்ள மாந்தர்களின் ஒப்பனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## அரசனின் மணி முடிகள் (தலையணி)

*பழங்காலத்தில் அணிகலன்களை ஆண்கள், பெண்கள் என இருவரும் அணிகலன்களை அணிந்து வந்தார்கள். மன்னர்களின் குடும்பம் மற்றும் மன்னர்கள் அணிகலன்களை அணிந்து கொள்வது வழக்கமாக இருந்திருக்கின்றன.*

*அதிலும் மன்னர்கள் புகழ்பெற்ற மணி முடிகளை அணிவதில் மிகவும் சிறப்பு பெற்றவர்களாக திகழ்ந்தார்கள் என்பது தெளிவாக தெரிகிறது.*

***'நன்றீமீன் மன்னீப் நெடுநற்பிறை கொணர்ந்து***
***அன்றறிந்த மன்னர் முடிதாக்க'***

*- (மு.தொ.பா.29)*

*என்ற பாடலை ஆராயும் போது பகைநாட்டு மன்னர்கள் சோழ நாட்டு மன்னனின் கால்களில் விழுந்து பணிந்து நின்றனர் என்ற செய்தியை நமக்கு உணர்த்துகிறது. இதில் மன்னர்களின் மணி முடியும் அவற்றினுடைய பெருமைகளையும் நமக்கு வெளிப்படுத்துகிறது.*

## குவளை மலர் மாலை

***'இறையோ வெனவந்திடம் பெறுதலின்றி***
***முறையோ வென்றென்றோர் மொய்த்து'***

*- (மு.தொ.பா.79)*

*என்ற பாடல்வரிகளை ஆராயும் போது மன்னர்கள் மலர்களை மாலையாக தொடுத்து தன் மார்பில் அணிந்து கொண்டார்கள் என்பது நமக்குத் தெரிய வருகிறது. மன்னர்கள் புகழ்மிக்க மலர்களைக் கொண்டு மாலையாக அணிந்துள்ளார்கள்.*

## வேல் மாலை

***'மலைபடுவ யானை வயமாற கூர்வேல்***
***தலைமடை தார் வேந்தல் மார்பு'***

*- (மு.தொ.பா.73)*

*என்ற வரிகளை ஆராய்ந்து பார்க்கும் போது*

*மன்னர்கள் புகழ்பெற்ற வேலை ஒன்றன்பின் ஒன்றாக கோர்த்து மாலையாக அணிந்து கொண்டார்கள் என்பது தெளிவாகிறது.*

**வளையல்**

*வளையல் என்பவை நாம் நம்முடைய இரு கைகளிலும் அணிந்து கொள்பவை ஆகும். வளையல் பொதுவாக வட்ட வடிவில் காணப்படும் ஒன்றாகும். வளையல் பெண்களின் கைகளுக்கு அழகு தரும் ஒன்றாக உள்ளது. தமிழ் பாரம்பரியப் பெண்கள் தம்முடைய இரு கைகளிலும் கைநிறையும்படி வயல்களை அணிந்து கொள்வார்கள்.*

***'பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை'***

***- (மு.தொபா.40)***

*என்ற வரியை ஆராயும்போது மன்னர்கள் வளையலை கடகம் என்ற பெயரில் வைத்திருப்பார்கள். பொன்னால் செய்யப்பட்ட கடகங்களை மன்னர்கள் தன்னுடைய கைகளில் அணிந்து இருந்தார்கள் என்பது தெரிய வருகிறது.*

*சோழ மன்னன் உலா வரும்போது வளையல்களை அணிந்த இளம் பெண்களை காண உலா வந்தான் என்பதை 'படர்தந்தான் பைந்தொபியார் காணத்' என்ற பாடல் வரிகள் நமக்கு உணர்த்துகிறது.*

**தும்பை மாலை**

***'வேற்றா ரகல முழுமே பெயாருகோடு***
***மாற்றார் மதில்றிறக்கு மால்'***

***- (மு.தொ.பா.83)***

*என்ற பாடல்வரிகளை ஆராயும் போது மன்னர்கள்தும்பை போன்ற மிகப் பழமையான பூவினை மாலைகளாக கோர்த்து தன்னுடைய கழுத்தில் அணிந்து கொண்டார்கள் என்பதை நம்மால் அறிய முடிகிறது. மன்னர்கள் தும்பை மாலையை அணிந்து கொண்டு போர்க்களத்திற்கு சென்றார்கள் என்பதும் நமக்கு புலனாகிறது.*

***துன்னரும் கடும் போர்த்தும்பை அரவம்***
***தன்னிகர் இல்லாத் தானை மறமே![1]***

*என்ற புறப்பொருள் வெண்பாமாலை வரிகளை நோக்குங்கால் தும்பைப் பூக்களை மன்னர்கள் பகைநாட்டியினருக்கு அச்சம் தரும் வகையில் மன்னர்கள் அணிந்து கொண்டிருந்தார்கள் என்பது நமக்கு தெளிவாகத் தெரிகிறது.*

**வாகை மாலை**

***'புல்லார் பிடியுலம்பத் தாங்கண் புதைத்தவே***
***பல்யானை யட்ட களத்து!"***

***- (மு.தொ.பா.87)***

*என்ற பாடல் வரிகளை ஆராய்ந்து பார்க்கும் போது வாகைபூ மாலைகளை மன்னர்கள் சூடியுள்ளார்கள் என்பது நமக்கு தெளிவுபட தெரிகிறது.*

*வாகை பூக்களை வைத்து மாலைகள் கட்டிக்கொண்டு மாலையாக அணிந்து கொண்டார்கள்.*

***இலைபுனை வாகை சூடி இகல் மலைந்து***
***அலைகடல் தானை அரசு அட்டு ஆர்தன்று[2]***

*என்ற பாடல்வரிகளைக் கொண்டுள்ள புறப்பொருள் வெண்பாமாலை வாகைபூ பயன்படுத்தியமிக்க சான்றாக அமைந்துள்ளது. அலை வீசும் கடல் போன்ற பெரிய படையினை உடையவன் பகைவேந்தன். அவனோடு மாறுபாட்டை மேற்கொண்டு போர்க்களத்தில் அப்படையை வீழ்த்தினான். ஓர் அரசன் அவ் வெற்றியால் ஆரவாரத்து தளிர் பிறவி தொடுக்கப்பட்ட வாகை மாலையை சூடினான் என்பது தெளிவாக காட்டுகிறது.*

**முத்து மாலை**

***'கைம்மனையில் ஒச்சம் பெறுகுவனோ யானுமோர்***
***அம்மனைக் காவல் உளேன்"***

***- (மு.தொ.பா.102)***

*என்ற பாடல்வரிகளை ஆராய்ந்து பார்க்கும் போது மன்னர்கள் முத்துக்கள் கொண்ட மாலைகளையும் அணிந்துள்ளார்கள் என்பது நமக்குத் தெரிகின்றது.*

*முத்துக்கள் பவளங்கள் போன்ற விலை உயர்ந்த பொருள்களிலும் மாலைகள் அணிந்திருந்தார்கள் என்பது அறிய முடிகிறது. பல்வேறான முத்துக்களை பல்வேறு வண்ணங்களால் மாலைகளை*

*அணிந்திருந்தார்கள். முத்துக்களை மன்னர்கள் மட்டுமே அணிந்திருந்தார்கள். முத்துக்கள் மன்னர்களுடைய காலத்தில் மிக சிறப்பான ஒரு ஒப்பனை செய்யும் பொருளாக இருந்தது என தெரிந்து கொள்ளலாம்.*

**பூணூல்**

*சமய சம்பிரதாயங்களுக்காக பூணூல்களை அணிந்து கொண்டார்கள். திருமணம் ஆகாதவர்கள் இரு பிரி பூணூலும், திருமணம் ஆனவர்கள் முப்பிரி பூணூலும் அணிந்து கொண்டார்கள். பிராமணர்கள் பூணூல் அணிவது அவர்களின் மதவழக்கம் ஆகும்.*

*மன்னர்களின் மரகதத்தால் செய்யப்பட்ட பூணூலை அணிந்திருந்தனர் என்பதற்கு,*

***'மரகதப்பூண் மன்னவர் தோள்வளை கீழா'***

***- (மு.தொ.பா.7)***

*என்ற அடி சாட்சியாக அமைகிறது.*

*பச்சை நிற கற்களை கொண்டு செய்யப்பட்ட பூ என்னும் கவசத்தை மன்னர்கள் அவர்களின் மார்பில் அணிந்து கொள்வார்கள். இவை ஒரு கவசமாக கூறப்படுகின்றது. அதைப்போல மார்பில் அணியும் கவசம் பூண் என்பதை,*

*கோவா மலை ஆரம் கோத்த கடல் ஆரம் தேவர்கோன் புண் ஆரம் தென்னர்கோன் மரபினவே[3] என்று சிலப்பதிகார ஆய்சியர் குரவை கூறுகின்றது.*

**முடிவுரை**

*தொள்ளாயிரத்தில் உள்ள ஒப்பனைகள் மற்றும் அவர்கள் எந்தெந்த பொருளையும் அணிந்தார்கள் என்பதையும் மன்னர்களின் மாலைகள் மற்றும் முத்துக்கள் கொண்ட மாலைகளையும், கடகம், வளையல், பூணூல் போன்றவற்றை இக்கட்டுரையில் சிறப்பான முறையில் ஆராய்ந்து சொல்லப்பட்டுள்ளது.*

**சான்றெண் விளக்கம்**

1. *திருஞானசம்பந்தம்.ச, புறப்பொருள் வெண்பா மாலை, ப.எ.131.*
2. *மேலது, ப.எ.157.*
3. *நாவலர்.ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம் ஆய்ச்சியார் குரவை, ப.471.*

**துணை நூற்பட்டியல்**


1. *திருஞானசம்பந்தம். ச - புறப்பொருள் வெண்பா மாலை கதிர் பதிப்பகம், தெற்கு வீதி திருவையாறு - 613 204.*
2. *வேங்கடசரி நாட்டார் - சிலப்பதிகாரம் அமிர்தம் பதிப்பகம் பி-1, குல்மொகர் குடியிருப்பு 15, செவாலிய சிவாஜி சாலை, தியாகராயர் நகர், சென்னை -600 017.*
3. *கதிர்முருகு. முனைவர் - முத்தொள்ளாயிரம் சாரதா பதிப்பகம், சென்னை - 600 014.*